கல்குடா கல்வி வலயம்
தரம் :- 5 மாணவர்களுக்கான விசேட செயற்திட்டம்
சுற்றாடல் சார் செயற்பாடுகள்
கருப்பொருள் :- எம்மை சூழவுள்ள பிராணிகள்

ஆசிரியர் : திருமதி.வி.நித்தியநாதன்

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

(01) பின்வருவனவற்றுள் பூச்சி இனத்துள் அடங்காதது?

(1) இராமபானம் (2) உண்ணி (3) நுளம்பு (4) குளவி

(02) கால்களற்ற ஊர்ந்து செல்லும் பிராணி?

(1) உடும்பு (2) நத்தை (3) மரவட்டை (4) பூரான்

(03) செட்டைகளை பயன்படுத்தி இடம் பெயரும் பிராணி?

(1) முதலை (2) இறால் (3) புறா (4) மீன்கள்

(04) மருத்துவப் பானம் ஒன்றை தயாரிக்கும் ஆற்றல் கொண்ட பிராணி?

(1) குளவி (2) வண்டு (3) தேனீ (4) தேள்

(05) நீரிலே தனது வாழ்க்கை வட்டத்தை ஆரம்பிக்கும் பிராணி?

(1) நுளம்பு (2) வீட்டு ஈ (3) எலி (4) வண்டு

(06) வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை சரியாக காட்டும் தொகுதி?

(1) நிறையுடலி, குடம்பி, முட்டை, கூட்டுப்புழு

(2) நிறையுடலி, முட்டை, கூட்டுப்புழு, குடம்பி

(3) முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி

(4) முட்டை, கூட்டுப்புழு, குடம்பி, நிறையுடலி

(07) வண்ணத்துப்பூச்சி முட்டையிடுவது?

(1) பூவின் மேற்பகுதியில் (2) பூவின் கீழ்பகுதியில்

(3) இலையின் மேற்பகுதியில் (4) இலையின் கீழ்பகுதியில்

(08) வண்ணத்துப்பூச்சியில் சுவையை உணரும் உறுப்பு காணப்படுவது?

(1) கால்களில் (2) வாயில் (3) செட்டையில் (4) உணர்கொம்பில்

www.lkedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

(09) உணர்கொம்பில் கண் காணப்படும் பிராணி?

(1) சிலந்தி (2) வண்ணத்துப்பூச்சி (3) வண்டு (4) நத்தை

(10) மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாதங்களை கொண்டிருக்கும் பிராணி?

(1) எலி (2) பல்லி (3) கரப்பான் (4) சிலந்தி

(11) பாதுகாப்பிற்காக தோலின் நிறத்தை மாற்றக்கூடிய பிராணி?

(1) மீன் (2) பூனை (3) ஓணான் (4) பாம்பு

(12) தாவரங்களை மாத்திரம் உணவாக உட்கொள்ளுபவை?

(1) காகம் , வெட்டுக்கிளி (2) எலி , யானை

(3) மைனா , நத்தை (4) முயல் , மான்

(13) இலங்கை நாட்டுக்கே உரித்தான பறவை இனத்துள் அடங்காதது?

(1) சபன் கோழி (2) நாகணவாய் (3) மயில் (4) நீலப்புள்

(14) எமது நாட்டிற்கு உரித்தான நகருயிரிகளுள் அடங்காதது?

(1) கொம்பு ஓணான் (2) உடும்பு (3) ஆமை (4) பல்லி

(15) பின்வருவனவற்றுள் முலையூட்டி அல்லாத பிராணி?

(1) கடற்சிங்கம் (2) வாத்து (3) திமிங்கலம் (4) வெளவால்

(16) முட்டையிட்டு குஞ்சு பொரித்து பாலூட்டும் பிராணியாக அமைவது?

(1) வெளவால் (2) சுண்டெலி (3) மைனா (4) பிளாற்றிஸ்பஸ்

(17) பிராணிகளை பாதுகாப்பதற்கு நாம் செய்யக்கூடாத செயல்களில் ஒன்று?

(1) புகலரண்களை அமைத்தல் (2) உணவு வழங்குதல்

(3) வாழிடங்களை அழித்தல் (4) நீர் வழங்குதல்

(18) பிராணிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும் மனித செயற்பாடாக அமைவது?

(1) பழமரங்களை நடுதல் (2) புற்களை நடுதல்

(3) வீட்டுத்தோட்டம் செய்தல் (4) காடுகளை எரித்தல்

(19) குப்பை கூளங்களை உக்கலடைய செய்யும் பிராணி?

(1) எறும்பு (2) உடும்பு (3) கறையான் (4) பாம்பு

www.lkedu.lk

(20) இலங்கைக்கு மட்டும் உரித்தான மீனினம் அல்லாதது?

(1) புள்ளிக்கோட்டி (2) மள்புளுட்டா (3) பாரை (4) புலத்ஹய்யா

(21) "மண்ணை கிண்டி உழுதிடும் மனிதருக்கு நண்பன் நான்....." என்ற பாடலில் குறிப்பிடப்படும் பிராணி?

(1) கறையான் (2) எருது (3) பசு (4) மண்புழு

(22) மிக வேகமாக ஓடும் பறவை?

(1) கிவி (2) கழுகு (3) மயில் (4) தீக்கோழி

(23) பின்வருவனவற்றுள் முள்ளந்தண்டு அற்ற பிராணி?

(1) பாம்பு (2) தவளை (3) எலி (4) மண்புழு

(24) உணவு உண்ட பின் ஓய்வான நேரத்தில் இரை மீட்கும் பிராணி?

(1) மைனா (2) மாடு (3) யானை (4) நாய்

(25) அதிக வெப்ப பிரதேசங்களில் வாழக்கூடிய மிருகம்?

(1) ஆடு (2) பூனை (3) ஒட்டகம் (4) புலி

(26) இரையை பிடிப்பதற்காக தனது வாழிடத்தை அமைத்துக் கொள்ளும் பிராணி?

(1) நத்தை (2) சிலந்தி (3) வெட்டுக்கிளி (4) பருந்து

(27) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்பு தேடாத பிராணி?

(1) சிப்பி (2) நத்தை (3) வண்டு (4) கடலாமை

(28) இலங்கைக்கு உரிய முலையூட்டிகளில் அடங்காதது?

(1) மரநாய் (2) கருங்குரங்கு (3) சுண்டெலி (4) குதிரை

(29) வெடி மருந்துப் பொருட்களை கண்டுபிடிப்பதற்கு காவல் துறையினருக்கு உதவும் பிராணி?

(1) ஒட்டகம் (2) நாய் (3) குதிரை (4) யானை

(30) இரவு நேரத்தில் ஒலி எழுப்பி உணவு தேடும் பிராணி?

(1) மாடு (2) வௌவால் (3) கொக்கு (4) மயில்

(31) இரவு நேரங்களில் விளக்கின் ஒளியை நாடி வரும் பூச்சியினம் ?

(1) பனிப்பூச்சி (2) ஈசல் (3) அள்துப்பூச்சி (4) சிலந்தி

www.lkedu.lk

(32) ஆகாயத்தோட்டி என அழைக்கப்படும் பறவை?

(1) சேவல் (2) காகம் (3) குயில் (4) செண்பகம்

(33) தோலினால் சுவாசிக்கும் பிராணி?

(1) மண்புழு (2) கணவாய் (3) பாம்பு (4) தவளை

(34) அடுக்கி வைக்கப்பட்டுள்ள புத்தகங்களுள் அதிகளவு காணப்படும் பூச்சியினம் ?

(1) இராமபாணம் (2) கரப்பான் (3) சிலந்தி (4) எலி

(35) தனது உமிழ் நீரினால் வாழ்விடத்தை அமைக்கும் பிராணி?

(1) சிலந்தி (2) குளவி (3) எறும்பு (4) கறையான்

(36) பின்வருவனவற்றுள் ஊன் உணவுகளை மாத்திரம் உண்ணும் பிராணி?

(1) நாய் (2) பூனை (3) காகம் (4) புலி

(37) நத்தைகளை உணவாக உட்கொள்ளும் பறவை?

(1) காகம் (2) வெளவால் (3) செண்பகம் (4) மைனா

(38) இலைகளை மடித்துக் கூடு அமைக்கும் பிராணி?

(1) இலைப்புழு (2) செவ்வெறும்பு (3) தூக்கணாங்குருவி (4) தேனீ

(39) பூனை விரும்பி உண்ணும் தாவரம் ?

(1) அறுகு (2) நெருஞ்சி (3) துளசி (4) குப்பைமேனி

(40) இலங்கையில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்?

(1) குமண (2) பின்னவல (3) வில்பத்து (4) யால

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

கல்குடா கல்வி வலயம்
தரம் :- 5 மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டம்
சுற்றாடல் சார் செயற்பாடுகள்
கருப்பொருள் :- எம்மை சூழவுள்ள பிராணிகள்
விடைகள்

(01) 2	(11) 3	(21) 4	(31) 2
(02) 2	(12) 4	(22) 4	(32) 2
(03) 4	(13) 3	(23) 4	(33) 1
(04) 3	(14) 1	(24) 2	(34) 1
(05) 1	(15) 2	(25) 3	(35) 1
(06) 3	(16) 4	(26) 2	(36) 4
(07) 4	(17) 3	(27) 3	(37) 3
(08) 1	(18) 4	(28) 4	(38) 2
(09) 4	(19) 3	(29) 2	(39) 4
(10) 2	(20) 3	(30) 2	(40) 1

www.lkedu.lk